FUTURE CULTURE
Connecting Staten Island's Waterfront

# எதிர்காலக் கலாசாரம்

## ஸ்டேடன் தீவின் நீர்முகப்பைத் தொடர்புபடுத்துதல்

“**கலாச்சாரங்களும் ஆற்றலும் இங்கு மிக நீண்ட காலமாக பரிமாற்றம் செய்யப்பட்டுக்கொண்டு இருக்கிறது**, மற்றும் அதன்மீதுதான் அனைத்தும் கட்டமைக்கப்பட்டு இருக்கிறது.” என்பதை *எதிர்கால கலாச்சார* செயற்பாட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் வில்லியம் மோரிஷ் பகிர்ந்துகொண்டார். அங்கு அமைந்துள்ள பல்வேறு பகுதிகளுக்கு மத்தியில் வடக்கு கடற்கரைப்பகுதி பரிமாற்றத்திற்கான ஒரு இடமாக —வெளிப்படைத்தன்மை மற்றும் பகிர்தலினால் வரையறுக்கப்பட்ட துடிப்பான மற்றும் பன்முகத்தன்மைவாய்ந்த கலாச்சாரத்தின் ஒரு மையமாக உள்ளது என்பது அவருடைய அவதானிப்பாக இருந்தது

இந்த பெரிய மாற்றத்திற்கு மத்தியில்—தி நியூயார்க் வலீ, எம்பயையர் அவுட்லெட்ஸ், அர்பி மற்றும் புதிய ஸ்டேப்பில்டன் நீர்முகப்பு, கலங்கரை விளக்கப் பகுதி, மற்றும் பே ஸ்ட்ரீட் தாழ்வாரம் மாற்றியமைத்தல்— சில குடியிருப்பாளர்கள், தங்களுடைய பகுதிகள் வெற்று பலகையாக பார்க்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் வடக்கு கடற்கரைப்பகுதியின் தனித்துவமான கலாச்சாரம் அழிந்துவிடும் ஆபத்தில் இருப்பதாகவும் அச்சப்படுகின்றனர். *எதிர்கால கலாச்சாரம்: ஸ்டேட்டன் தீவுடைய நீர்முகப்பை இணைக்கும்* – பொது வெளி வடிவமைப்பு அறக்கட்டளை ஸ்டேட்டன் தீவு கலை*களுடன்* இணைந்து செயல்படுத்திவரும் ஒரு திட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால், மேம்பட்டுவரும் நீர்முகப்பின் பண்பினை வடிவமைப்பதும் மற்றும் அதனுடைய எதிர்காலத்தில் தொடர்ச்சியான ஒரு ஊன்றுகோலாக இருப்பதும், *வடக்கு கடற்கரைப்பகுதியின்* துடிப்பான கலாச்சார சமூகங்கள் அர்த்தமுள்ள ஒரு பங்கினை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தும் ஆகும். ஏற்கனவே அங்கு என்ன இருக்கிறது என்பதை ஆவணப்படுத்துவதற்கும், வாய்ப்புகள் மற்றும் குறுகிய- மற்றும் நீண்ட-கால கலாச்சார குறுக்கீடு*களை* அடையாளம் காண்பதற்கும், மற்றும் கலை மற்றும் கலாச்சார நடிகர்களுக்கும் மற்றும் செயல்பாடுகளுக்கும் ஆதரவு அளிப்பதை பரிந்துரைத்தலுக்கும் இது இன்றியமையாததாக உள்ளது.

*எதிர்கால கலாச்சாரம்* செய்தித்தாளுடைய கடைசி பதிப்பு வெளிவந்ததிலிருந்து, திட்டத்தின் குழுவினர் ஒரு ஆறு-அமர்வுகளைக்கொண்ட செயற்பாட்டுக் குழுவினை கூட்டியுள்ளனர் மற்றும் வடக்கு கடற்கரை நிறுவனங்கள், நகர செயலான்மைகள், மற்றும் தனியார் பங்குதாரர்களை சந்தித்துள்ளனர். கலைகள் மற்றும் நீர்முகப்பின் ஊடான கலாச்சார குறுக்கீடுகளுக்காகவும் ஒரு துவக்க பரிந்துரைகளின் தொகுப்பை உருவாக்குவதற்காக அமர்வுகளிலிருந்து பெறப்பட்ட பின்னூட்டங்கள் மற்றும் ஆலோசனைகளை அவர்கள் தொகுத்துள்ளனர். 100-க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் தனிநபர்களும் வரைவு பரிந்துரைகளை தற்போது மீளாய்வு செய்துகொண்டுள்ளனர், பக்கம் 4-யில் அதனுடைய ஒரு சுருக்கமான விவரங்களை நீங்கள் காணலாம். மார்ச் மாதம் முழுவதும் வடிவமைப்பு அறக்கட்டளை, ஸ்டேட்டன் தீவு கலைகள், மற்றும் *எதிர்கால கலாச்சாரத்தின்* குழுவினர்கள் இந்த கூர்மையான மறுபார்வை கருத்துக்களை ஒருங்கிணைத்து இறுதி

ஆவணத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள். மார்ச் 18, 2017 அன்று, அர்பி-யில் உள்ள ஸ்டேட்டன் தீவு கலைகளுடைய புதிய இல்லத்தில் நடைபெறும் ஒரு பொது நிகழ்வில் *எதிர்கால கலாச்சாரத்தின்* துவக்க பரிந்துரைகளை நாங்கள் வெளியிடுகின்றோம்!

*எதிர்கால கலாச்சாரத்தின்* செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு, மார்ச் 28-ஆம் தேதி, இரவு 7.00-8.30 மணிக்கு ஸ்டேட்டன் தீவு கலைகள், 23 நேவி பியர் வளாகத்தில் நடைபெற இருக்கும் பரிந்துரைகள் வெளியீட்டு நிகழ்விற்கு வருகை தரவும். அல்லது திட்டத்தின் குழுவினர்களை futureculture@designtrust.org என்னும் மின்னஞ்சலில் தொடர்புகொள்ளுங்கள்.

---

***எதிர்கால கலாச்சாரத்தின்* செயற்பாட்டுக்குழுவினைப் பற்றி**

ஆறு அமர்வுகள் நடைபெற்ற காலத்தில், *எதிர்கால கலாச்சாரத்தின்*—கலைஞர்கள், சிறு வணிக உரிமையாளர்கள், கலை நிர்வாகிகள், சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள், மற்றும் பலரை உள்ளடக்கிய செயற்பாட்டுக்குழு—வடக்கு கடற்கரைப்பகுதியின் கடந்தகால மற்றும் நிகழ்கால கலாச்சார சொத்துக்களையும், தொடர்பற்று இருக்கும் பகுதிகள் மற்றும் வாய்ப்புகளையும், மற்றும் ஸ்டெட்டன் தீவினுடைய பல்வேறு கலாச்சார சமூகங்களுடைய தேவைகளையும் அடையாளம் கண்டுள்ளது, இந்த திட்டத்தின் நோக்கங்களுக்காக, கலாச்சாரம் என்பதை பின்வருமாறு பரந்த அளவில் வரையறுக்கப்படுகின்றது: எந்த பகுதியிலிருந்து மக்கள் வருகிறார்கள், அவர்கள் உண்ணும் உணவு, அவர்கள் பயணம் செய்யும் விதம், அவர்கள் உருவாக்கும் கலை, அவர்கள் பேசும் மொழி, அவர்களை அசைக்கக்கூடிய அம்சங்கள். கலாச்சாரத்தின் பரந்துபட்ட வடிவங்களை உருவாக்குதல், தயாரித்தல், விநியோகம் செய்தல், மற்றும் நிர்வகித்தல் போன்றவற்றில் பங்குபெறும் அனைவரையும் கலாச்சார சமூகம் உள்ளடக்கியது.

வடக்கு கடற்கரைப்பகுதி சிறப்பானதாக இருப்பதற்கு காரணமான மக்கள் மற்றும் இடங்களைப் பற்றி ஒரு பரந்த அளவிலான தகவலை பொது வெளி வடிவமைப்பு அறக்கட்டளைக்கு, செயற்பாட்டு குழு அளித்தது. கொள்கை ஈடுபாட்டாளர் பென் மார்கோலிஸ் தற்போதைய மேம்பாட்டு மற்றும் மாற்றியமைக்கும் பணிகளுடைய—நேர்மறையான, எதிர்மறையான, நடுநிலையான, மற்றும் நுட்பமான வேறுபாடுகளுடன்—எதிர்பார்க்கப்படும் விளைவுகளை குழுவினருடன் பகிர்ந்தார். நகர்ப்புற வடிவமைப்பு ஈடுபாட்டாளர் மார்கி ருட்டிக் ஊடாடும் வரைபட பயிற்சிகளை வழி நடத்தினார். செயற்பாட்டு குழுவினர் ஒரு "சாத்தியக்கூறுகளுக்கான" அமர்வினையும் சேர்த்திருந்தனர், இதில் வடக்கு கடற்கரைப்பகுதியின் சமூக நிறுவனங்களுடைய மூன்று பிரதிநிதிகள் அவருகளுடைய ஆலோசனைகளைப்பற்றிய பின்னூட்டங்களை அளித்தனர் மற்றும் அவர்களுடைய தனிப்பட்ட கடந்த கால முன்னெடுப்புக்களில் கற்றுக்கொண்ட பாடங்களை பகிர்ந்து கொண்டனர்.

செயற்பாட்டு குழுவினர்  கதைகள், பின்னூட்டங்கள், மற்றும் குறிப்பிட்ட பரிந்துரைகள் போன்றவற்றுடன், கூடுதலாக *எதிர்கால கலாச்சாரத்துடைய* பரிந்துரைகளின் உருவாக்கத்தினை வழிநடத்துவதற்காக ஆறு கொள்கைகளை வரையறுப்பதற்கு உதவினர்.  இந்த கொள்கைகளாவன:

1. **எதிர்கால கலாச்சாரத்தின் எதிர்காலசாத்தியங்களுக்கு வடிவம்கொடுங்கள்**
பண்பாட்டு நடவடிக்கைக்கு தற்போதைய மற்றும் நீடித்திருக்கக்கூடிய ஒரு பங்கினை தேடுங்கள்

2. **சமூக நடவடிக்கையினை வினையூக்கப்படுத்துங்கள்**
அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் சமூகத்தை உத்வேகப்படுத்தக்கூடிய பரிந்துரைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குங்கள்.

3. **சுய-நிர்ணயத்தினை செயல்படச்செய்யுங்கள்**
தனது சொந்த எதிர்காலத்தின் மீது செயல்விளைவை ஏற்படுத்த கலாச்சார சமூகத்தை சவால் விடுங்கள் மற்றும் ஊக்கம் செய்யுங்கள்.

4. **கலாச்சார விழுப்பிணர்வினை உட்புகுத்துங்கள்**
வடக்கு கடற்கரைப்பகுதி உள்ளூர் அறிவினை திட்டங்கள் மற்றும் கூட்டுப் பங்காண்மைகளுக்கு மையமாக இருக்குமாறு செய்யுங்கள்.

5. **உறுதியான மதிப்பினை விளக்குங்கள்**
பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுக்கு கலாச்சாரத்தின் பொருளாதார வெகுமதிகளை எடுத்துக் கூறுங்கள்.

6. **திட்டமிடும்போதே முன்னேறிச்செல்லுங்கள்**
நீண்டகால திட்டங்களை இயற்றும் அதேநேரத்தில், பங்குதார்ரகளுடன் துரிதமான முன்னேற்ற முயற்சிகளை செய்யுங்கள்.

---

இர்மா பொஹொர்கெய்ஸ் -கெய்ஸ்லர்
ஊமீ சீஸே-பீட்டர்ஸ்
டெபோரா டேவிஸ்
வோல்கர் கோட்ஸ்
லோரி ஹானர்
காரல் ஹூப்பர்
ஜான் கில்குலென்
ரஷிதா லாட்னர்-செவார்ட்
டிபி லாம்ப்மேன்
ஹெலென் லெவின்
ஃபெர்ன் மெட்காஃப்

கெயில் மிடில்டன்
வில்லியம் மோரிஷ்
விக்டோரி முன்ரோ
க்ரிஸ்டியன் பென்
மெலிஸா வெஸ்ட்
நிக்கோலஸ் செவெஜின்ட்ஸோவ்

---

**எதிர்கால கலாச்சாரத்தின் பரிந்துரைகளைப் பற்றி**

ஸ்டேட்டன் தீவு கலையின் டஜன் கணக்கான நிறுவனங்கள், பொது அதிகாரிகள், மற்றும் சமூக குழுக்கள் தற்போது *எதிர்கால கலாச்சாரத்தின்* துவக்கப் பரிந்துரைகளுடைய ஒரு வரைவு பதிப்பினை மீளாய்வு செய்துகொண்டுள்ளனர். நாங்கள் இதுவரை அடையாளம் கண்டுள்ள நோக்கங்கள் மற்றும் பரிந்துரைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களை உட்புகுத்திய பிறகு, திட்டத்தின் குழுவினர் ஒரு துவக்கப் பரிந்துரைகள் ஆவணத்தினை உருவாக்குவார்கள். இந்த ஆவணம் மார்ச் 29 அன்று ஸ்டேட்டர் தீவு கலையில் வெளியிடப்பட இருக்கிறது. கலாச்சார சமூகம், பொதுத்துறை அல்லது தனியார் துறை போன்றவைகள் ஒவ்வொரு பரிந்துரையினையும் செயல்படுத்தி சாதிப்பதற்கு, பின்பற்ற இயலக்கூடிய குறிப்பிட்ட செயல் உருப்படிகளை இந்த ஆவணம் கொண்டிருக்கும். துவக்கப் பரிந்துரைகள் ஆவணம், பங்குதாரர் மற்றும் சமூக ஈடுபாட்டின் மூலம் மேலும் சீர்மைக்கப்பட்டு பின்னர் அச்சிடப்பட்ட இறுதி ஆவணம் இந்த இலையுதிர்காலத்தில் வெளியிடப்படும்.

I. உள்ளூர் கலாச்சாரத்தினை விரிவுபடுத்து மற்றும் அதன் வளர்ச்சியினை ஊக்குவி
   1. பொதுமக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்து
      - 1.1. அடையாளம்காணக்கூடிய கலாச்சார தொகுதிகளையும் பயண இலக்குகளை மேம்படுத்து
      - 1.2. அளவடூ மற்றும் ஒழுங்கமைப்புடன் தனித்துவமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்
   2. ஆராய்ச்சி முயற்சிகளை ஊக்குவி
      - 2.1. அனைத்தையும் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த செய்தி பரிமாற்றங்களை உருவாக்கு
      - 2.2. ‘தீவுவாசிகள் ’ மற்றும் பார்வையாளர்களிடம் வடக்கு கடற்கரைப்பகுதியின் கதைகளை பகிர்ந்துகொள்

2.3. உள்ளுணர்வு வழிகண்டடைதல் மற்றும் இடம்-சார்ந்த கலாச்சார விழிப்புணர்வு குறுக்கீடுகளை வழங்கு

3. ஆதரவை விரிவுபடுத்து மற்றும் ஆழப்படுத்து

3.1. ஒருங்கிணைக்கவும் மற்றும் கலை மற்றும் கலாச்சார நடைமுறையின் மதிப்பினுடைய நியாயங்களை விளக்கவும் ஒரு பகிரப்பட்ட குரலை உருவாக்குங்கள்

3.2. சமூகங்களுக்கு இடையேயும், தனியார் மற்றும் பொது பங்குதாரர்களுடனும் கூட்டுப் பங்காண்மைகளை அதிகப்படுத்து மற்றும் வலுப்படுத்து

3.3. கலாச்சார சமூகங்களை நிதி ஆதாரங்களுடன் இணையச்செய்

II. இணையச் செய் மற்றும் இடத்தை அதிகரி

4. நீர் முகப்பை கொண்டாடு

4.1. பாதுகார் மற்றும் கடல்சார் கலாச்சார அனுபவத்தை அதிகரிக்க செய்

4.2. கலாச்சாரத்தின் ஊடான நெகிழ்த்தன்மையின் வளரச்சியினை ஊக்குவி

5. குறைவான பயன்பாட்டில் இருக்கும் திறந்த வெளியினை செயல்படுத்து

5.1. இருக்கும் பசுமை வெளிகளை அதிகரிக்க செய்

5.2. இடையே இருப்பவைகளையும் கருத்தில் கொள்

6. கட்டுமான அனுபவங்களை மெம்படுத்து

6.1. மக்களை கலாச்சாரத்துடன் முன்நகர்த்து.

6.2. காத்திருத்தல் மற்றும் கூட்டங்களுக்கான இடங்களை வரையறை செய்

7. கட்டப்பட்டுள்ள இடங்களை கலச்சாரத்திற்காக மேம்படுத்து மற்றும் பாதுகாத்து வை.

7.1. தற்போது கலாச்சார சமூகத்திற்கு வாழவும், பணிபுரியவும் மற்றும் இருப்பதுற்குமான வெளிகளை பாதுகாவல் செய்.

7.2. கலாச்சார சமூகத்திற்கு வாழவும், பணிபுரியவும் மற்றும் இருப்பதுற்குமான தற்போதுள்ள அல்லது வரலாற்று கட்டமைப்புகளை தகவமை

7.3. புதிய மேம்பாட்டு திட்டங்களில் கலாச்சார சமூகத்திற்கு வாழவும், பணிபுரியவும் மற்றும் இருப்பதுற்குமான இயலக்கூடிய இடத்தை திட்டமிடு

---

வேலிக்கு பின்னால்

எழுதியவர் பென் மார்கோலிஸ்

தி பே ஸ்ட்ரீட் தாழ்வாரம் வளாகம் @ நகர்ப்புறமையப்பகுதி ஸ்டேட்டன் தீவு வசிப்பிட திட்டமிடல் ஆய்வு என்பது ஹவுசிங் நியூயார்க்குடைய ஒரு பிரிவு ஆகும். இயலக்கூடிய விலையில் வடுகளை கட்டுவதற்கும் பாதுகாப்பதுற்குமான மேயரின் திட்டம். இந்த ஆய்வின் பகுதியாக, ஒரு 45-ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதியில், அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள் வகை மற்றும் கட்டிடங்கள் அளவு போன்றவற்றை நிர்வகிக்கும் தற்போதைய பகுதி உருவாக்கலில், நிலப் பயன்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மாற்றங்களை மாநகரம் முன்மொழிந்திருக்கிறது. பகுதிமாறியமைத்தலின் நோக்கம் பே ஸ்ட்ரீட், கேனல் ஸ்ட்ரீட், குத்தகைக்கு அல்லது விற்பனை செய்யப்படுவதற்கான மூன்று அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் ஸ்டேப்பல்டன் (முன்னதாக ஹோம்போர்ட் என்று அழைக்கப்பட்ட) நீர்முகப்பு தளத்தின் (வரைபடத்தை பார்க்கவும்) மாநரகத்துக்கு சொந்தமான மீதம் இருக்கும் பகுதியில் அமைந்துள்ள இரண்டு எதிர்கால வளர்ச்சி தளங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

“வசிப்பது மற்றும் பணிபுரிவது இரண்டு ஒரே இடத்தில் அமையும்படியான-வசிப்பிடம் என்னும் ஒரு வாக்குறுதியினை“ பே ஸ்ட்ரீட் வழங்குகின்றது என்றும் மற்றும் இத்திட்டம் “ஸ்டேட்டன் தீவுனுடைய மூத்த உறுப்பினர்கள், குடும்பங்கள் மற்றும் இளைஞர்களுடைய தேவையான வாடகை வடுகள் வகையினை கொண்டு வரும் எனவும் சிட்டி ஹால் பிரதிநிதிகள் கூறினர். மே 2015-யிலிருந்து, சமூக குழுக்கள் மற்றும் மாநாகர அதிகாரிகள் 2,569 புதிய அடுக்கு மாடி குடியிருப்புகள், சுமார் 600,000 சதுர அடி அளவிற்கான வணிக வெளி, மற்றும் 48,595 சதுர அடி அளவிற்கான சமூக வெளி-க்கான தற்போதைய முன்முயற்சியினை விவாதித்து இருக்கின்றனர்.

சமூகக்குழுவின் பங்கேற்பாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கட்டிடங்களுடைய சரியான மற்றும் தேவையான உயரங்களைப் பற்றியும், புதிதாக உருவாக்கப்படும் வடுகளுக்கு செலவிட இயலக்கூடிய வரம்பின் அளவு மற்றும் உள்கட்டமைப்பிற்கும் போக்குவரத்துக்கும் தேவையான முதலீட்டு வரம்பின் அளவு போன்றவற்றை பற்றிய ஆலோசனைகளை உள்ளடக்கிய முற்றிலும் மாறுபட்ட இலக்குகள் தோன்றியிருக்கின்றன. *எதிர்கால கலாச்சாரத்தின்* பங்குதாரர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் எவ்வாறு பே ஸ்ட்ரீட்-யின் திட்டம் உள்ளூர் கலாச்சாரத்திற்கு ஆதரவு அளிக்கும் என்பதை புரிந்துகொண்டு தெரிவிப்பது என்னும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். தற்போதைய கவனம், நிலப் பயன்பாட்டின் மாற்றங்கள் உள்ளூர் கலாச்சார சமூகத்தை வலுப்படுத்த எவ்வாறு உதவ இயலும் என்பதை ஆராய்வதில் உள்ளது, உதாரணமாக, கலாச்சாரத்தை உருவாக்குபவர்களுக்கு வாழ்வதற்கும், பணிபுரிவதற்கும் மற்றும் இருப்பதற்குமான போதுமானஅளவு இடவசதி உள்ளதா என்பதை உறுதிசெய்தல், மற்றும் முக்கிய கலாச்சார மற்றும்

சமூக நடவடிக்கைகளுக்காக பொதுவெளி மற்றும் குறைவான பயன்பாட்டில் இருக்கும் வெளிகளை அதிகப்படுத்தல்.

பொது மற்றும் தனியார் திட்டங்களுடைய காலவரிசை அடிப்படையிலான புதுப்பித்தலுக்கான எதிர்கால பிரச்சனைகளில் இங்கு "வேலிக்கு பின்னால்" மீண்டும் சரிபார்க்கவும்.

**ஆதாரங்கள்:**

http://www1.nyc.gov/site/planning/plans/bay-street-corridor/bay-street-corridor.page
http://citylimits.org/2016/10/25/documents-about-the-proposed-bay-street-rezoning/

**ஈடுபடவிருக்கும் அடுத்த கட்டங்கள் மற்றும் வாய்ப்புகள் (காலவரிசை மற்றும் அறிவிக்கப்பட இருக்கும் கால அட்டவணை)**

ஜூலை மாதத்திலிருந்து, வடகிழக்கு ஸ்டேட்டன் தீவு-னுடைய பகுதிமாற்றியமைக்கும் முன்மொழிதலுடைய சாத்தியமான சுற்றுச்சூழல் தாக்கங்களை ஆய்வு செய்யும் ஒரு ஆவணமான, வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையினை (DEIS), மாநகரகம் தயாரித்துக் கொண்டிருந்திருக்கிறது. சமூகத்துடைய பின்னூட்டங்கள் மற்றும் இன்றைய தேதி வரையிலான ஈடுபாட்டின் அடிப்படையில், தற்போதைய பகுதிஉருவாக்க முன்மொழிவினை சீர்படுத்தும் பணியினையும் மற்றும் "சமூகத்தின் தேவைகளை அடையாளம் காண்பதையும்" மாநகரம் செய்துகொண்டுள்ளது.

1.) **வரைவு வசிப்பிடப்பகுதி திட்டம்**
பகுதிஉருவாக்கல், வடுீகள் மற்றும் கட்டுமானத்திற்கான முன்மொழிதல்கள் பற்றிய ஒரு புதுப்பிக்கப்பட்ட தகவலினை மாநகரம் வழங்கும்.

2.) **நற்சான்றளிப்பு மற்றும் வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை** (DEIS)
பே ஸ்ட்ரீட் திட்டம் மற்றும் அது தொடர்பான நிலப் பயன்பாட்டு விண்ணப்பத்தினையும் பொது மீள்பார்வை செய்யும் சம்பிரதாயமான செயல்முறையிடனும் மற்றும், அதனுடன் வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையுடைய பரிந்துரைகளின் ஒரு விளக்கக்காட்சியுடனும் நற்சான்றளிப்பு துவங்கும்.

3.) **சமச்சீரான நிலப் பயண்பாட்டினை பரிசீலனை செய்யும் செயல்முறை** (ULURP) **பொது மீள்பார்வை**

சமூக மன்றம் 1, பெருநகரத் தலைவர், மாநகர திட்ட ஆணைக்குழு மற்றும் மாநகர சபை போன்றவற்றினால் 5 முதல் 7 மாதங்கள் வரையிலான ஒரு தொடர்ச்சியான பொதுக்கூட்டங்கள் மற்றும் மீள்பார்வைகள்.

---

**செயல்படும் நீர் முகப்பிலிருந்து: நினைவில் நின்றவைகள்**
**எழுதியவர் சச்சிந்தரா நவினா**

நடு மேடை, என்மீது விளக்கு வட்டத்தின் வெளிச்சம். நான் சங்கினை என் கைகளால் இறுக்கமாக பற்றினேன். மாதக்கணக்கான பயிற்சிக்குப் பிறகு, சங்கு-உடைய ஒலி எவ்வாறு இருக்கும் என்பதைப்பற்றி நான் பதட்டமாக இருந்தேன். டிரம்ஸ் வாசிப்பவர் *"சுர்ல்[1]" ("surel[1]")* துவங்குவது எனக்குக் கேட்டது, மற்றும் அந்த தருணத்தில் பெருமை மற்றும் நம்பிக்கை உணர்வை என்னை மீண்டெழச்செய்தது. நான் ஒரு ஆழமான மூச்சினை எடுத்தேன், இறுக்கமாக பற்றினேன், என் உதடுகளை சுருக்கி சங்கினை ஊதினேன். ஒலி சத்தமாகவும் தெளிவாகவும் மற்றும் நீடித்ததாகவும் இருந்தது எனக்கு நிம்மதியாக இருந்தது. ஒரு மகிழ்ச்சியடையச் செய்யும் புன்னகை, என் முகத்தை கடந்தது, ஆற்றல், பயிற்சி மற்றும் பொறுமை போன்றவற்றை அறிந்துகொண்ட என்னை அத்தருணத்தில், மிகவும் அற்புதமான சங்கின் ஒலிகளை வழங்க என்ன எடுத்துக்கொண்டது.

இலங்கையின் பாரம்பரிய நடனமான, கண்டியன் நடனத்தில், சங்கு என்பது ஒரு நடனத்தின் முக்கிய அம்சங்களை சமிக்ஞை செய்ய பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். கடற்கரையில் கண்டறியப்பட்ட இப்பெரிய சங்கினை பல்வேறு சடங்குகள் மற்றும் மரபுகளுக்கு பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக பிரத்யேகமாக தயாரார்படுத்த வேண்டும். முதலில் கொதிக்க வைத்து பின்னர் கிருமி நீக்கம் செய்வதற்காக நீராவியில் வேகவைத்து அதனையடுத்து ஒரு கலைஞரின் மூலம் குடையப்படுகின்றது. தத்ரூபமான ஒலியினை ஏற்படுத்துவதற்கென்று கருவியில் வாய் வைக்கும் பாகமாக ஒரு துளை உருவாக்கப்பட்டு உள்ளது. இலங்கையிலிருந்து ஸ்டேட்டன் தீவிற்கு கொண்டுவரப்பட்ட இந்த பண்டைய பாரம்பரியத்தை என்னால் தொடர முடிந்தது.

அமேரிக்காவில் பிறந்து வளர்ந்த பதின்ம வயதினர் பலர் தங்களுடைய வேர்களையும் கலாச்சாரத்தையும் மறந்துவிடுகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு, என் பெற்றோர் இலங்கையில் இருந்து அமெரிக்கா குடிபெயர்ந்தனர் மற்றும் தங்கள் குழந்தைகள் தங்களுடைய பாரம்பரியத்தை ஒருபோதும் கைவிடக்கூடாது என உறுதி பூண்டனர். கண்டியன் நடனத்துடைய பாரம்பரிய கலை வடிவம் என்னை என்னுடைய கலாச்சாரத்துடன் தொடர்பில் இருக்க வைத்துள்ளது.

---

[1] சுர்ல்(Surel): சடங்கு ரீதியான கண்டியன் ட்ரம் அறிமுகம்

என்னுடைய தாய் நிலமான, இலங்கை மற்றும் அதனுடன் இணைந்திருக்கும் துடிப்பான பாரம்பரியங்களையும் ஒருபோதும் மறக்காமல் இருக்க உதவுகின்றது.

ஸ்டேட்டன் தீவு கலைகள் நாட்டுப்புற வாழ்க்கை திட்டம், அதன் புதிய முன்முயற்சியான *ஸ்டேட்டன் தீவு-னுடைய செயல்படும் நீர்முகப்பு: நியூயார்க் சிட்டியின் மறக்கப்பட்ட பெருநகர கடல்சார் நாட்டுப்புற வாழ்க்கை*-யிடமிருந்து பல்வேறுமாறுபட்ட குரல்களை வழங்கும் ஒரு தொடர்ச்சியான நிரலை பங்களிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது. இந்த சமூகத்தினால் இயக்கப்படும் திட்டம் முழுமையான கலாச்சார பாரம்பரிய சுற்றுலாவின் மூலமாக, ஸ்டேட்டன் தீவு-னுடைய நீர்முகப்பின் சமூக மூலதனத்தை புத்துயிரூட்ட முற்படுகிறது, அத்துடன் கதைகளுக்குரிய மதிப்பளிப்பதையும் உள்ளூர் கடல்சார் பாரம்பரியங்களை காத்துவருபவர்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவினையும் அளிக்கின்றது. நாட்டுப்புற தொடர்களின் ஒவ்வொரு சமர்ப்பிப்பும் நாட்டுப்புற வாழ்க்கை திட்டத்தின் தனித்துவமான ஆராய்ச்சி குழு உறுப்பினரால் இயற்றப்படுகின்றது மேலும் அம்சங்களையும், பொருள் கலாச்சாரத்தினையும், மற்றும் நினைவுகளையும் கண்டடைவதை கவித்துவமாக பேசுகின்றது.

[Folklife Photo]

---

**வடக்கு கடற்கரைப்பகுதி நீர்முகப்பினை ஒரு இடமாக புரிந்துகொள்ளுதல்**
எழுதியவர் மார்கி ருட்டிக்

ஸ்டேட்டன் தீவுடைய வடக்கு கடற்கரைப்பகுதி ஒரு வளமான மற்றும் – தங்களுடைய தனித்துவமான மற்றும் உண்மைத்தன்மையான உற்சாகத்தையும் கொண்ட கிராமங்கள்; நீண்ட கடற்கரைமுழுதும் உங்களால் கடக்க இயலுவதும், கடல் காற்று மற்றும் ஒலிகளில் நீங்கள் மூழ்குவதைபோன்ற உணர்வைத்தரும் நீர்முகப்பு; இப்போதும் புலப்படும் அழகாக அளவிடப்பட்ட பழைய கட்டிடங்களின் அடுக்கடுக்கான வரலாறு; வெவ்வேறான பாரம்பரியங்களாலும் தேசிய இனங்களாலும் நிரம்பியுள்ள சமூகங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க அளவிற்கு பல்வேறு கலைஞர்கள், கைவினை கலைஞர்கள், மற்றும் குடிமை ஆர்வலர்களின் இல்லம்-ஆக விளங்குவது என பலதரப்பட்ட தன்மைகளைக் கொண்ட நகர்புற நிலப்பரப்பு ஆகும். இந்த அனைத்து தனித்துவமான பண்புகள் வடக்கு கடற்கரைப்பகுதியின் கலாச்சாரத்தினை உருவாக்கின்றது. *எதிர்கால கலாச்சாரம்* திட்ட குழுவினராக எங்களுடைய பணி அதன் பல்வேறு இழைகளை பின்னி எதிர்காலத்திற்கான ஒரு ஒத்திசைந்த பார்வையாக பின்னுவாதாக இருந்து வருகின்றது.

வடக்கு கடற்கரைப்பகுதியை ஒரு இலக்காகவும் மற்றும் இல்லமாகவும் நாங்கள் வரையறுக்க விரும்பும்போது, நாங்கள் அதை ஒற்றைத்தன்மையுடையதாக உருவாக்க முற்படவில்லை. பே ஸ்ட்ரீட்-யின் வழியாக சுற்றுச்சூழல்களை பார்க்கும் போது, நாங்கள் ஒரு ஒன்றுபட்ட பே ஸ்ட்ரீட் வளாக யோசனையினை அடிக்கோடிட்டுக் காட்டுவதில் ஆர்வம் குறைவாகவும் மற்றும் பன்முகத்தன்மைகள் விரிந்து செல்லும் புள்ளிகளை வளர்த்தெடுப்பதிலும் மற்றும் செறிவூட்டப்பட்ட இணைப்புகளை உருவாக்குவதிலும் ஆர்வம் மிகுதியுடனும் உள்ளோம். ஃபெர்ரி-க்கு செயின்ட் ஜார்ஜ் மற்றும் டோம்ப்கின்ஸ்வில்லி-உடனாக இருக்கும் நெருங்கிய தன்மையும், மற்றும் தி நியூ யார்க் வலீ மற்றும் எம்பயர் அவுட்லெட் போன்ற வரவிருக்கும் ஈர்க்கக்கூடிய அம்சங்களும் ஒரு வரையறுக்கப்பட்ட நகர வளாகம் மற்றும், அற்புதமான போரோஹ் ஹால் கட்டிடங்கள் மற்றும் பௌலோ பூங்கா-விலிருந்து மிகவும் நுண்ணியமாக செதுக்கப்பட்டுள்ள டோம்ப்கின்ஸ்வில்லி வசிப்பிடப்பகுதி - ஒருவர் ஒரு பகல் பொழுது பயணத்தில் நடந்து கடக்கக்கூடிய ஒரு சில்லறை மற்றும் பொழுதுபோக்கு வளாகம், வரை வேறுபடும் தெருக்களின் தோற்ற அமைப்பு இருக்கலாம் என பரிந்துரைக்கின்றது.
டோம்ப்கின்ஸ்வில்லி மற்றும் ஸ்டேட்ப்பில்டன்-க்கு இடையே பே ஸ்ட்ரீட்-யில் அமைந்திருக்கும் வணிகவளாகத்தின் சில்லறை பெட்டிகடைகள் மற்றும் தொழில் துறை-யின் அகன்ற பட்டை – அவற்றில் பெரும்பான்மையானவைகளின் முன்பகுதிகள் வாகனங்கள் நிறுத்தும் இடங்களை நோக்கி அமைந்துள்ளன- இவற்றிற்கு, செயின்ட் ஜார்ஜ்–டாம்ப்கின்ஸ்வில்லி நீட்டிப்பில் இருப்பவைகளிலிருந்து அப்பட்டமான முறையில் முற்றிலும் மாறுபட்ட வடிவத்தினை உருவாக்க இயலும். இந்தப் பகுதியினை மழைநீர் மேலாண்மை செய்யக்கூடியதாவும், மிகவும் தேவைப்படும் நிழலினை தரக்கூடியதாகவும் மற்றும் முனைகளுக்கு இடையே சுவாசிப்பதற்கான வெளியினை உருவாக்கக்கூடிய– பசுமைவளையத்திற்கும் மற்றும் நீர்முகப்பின் கீழ்ப்பகுதியில் இருக்கும் ஸ்டேட்டன் தீவின் இதர இயற்கை பகுதிகளுக்கு காடுகளின் தன்மை கொண்டுவரும், பலவகைப்பட்ட பயிர்களின் ஒரு பச்சைநிற ரிப்பனாக மாறலாம்.

கடந்த காலங்களில், வடக்கு கடற்கரையின் மேட்டுநில சமூகங்கள் நீர்முகப்பிலிருந்து பிரிக்கப்பட்டு இருந்துள்ளது. வேலிகளின் தடுப்புகள் மற்றும் உயரேசெல்லும் ரயில்களுக்கு உயிரூட்டம் அளிக்கும்பொருட்டு, கலை மற்றும் பண்பாட்டினை பயன்படுத்தி கிராமங்கள் மற்றும் பே ஸ்ட்ரீட்-யிலிருந்து நீர்முகப்பிற்கு வலுவான இணைப்புகள் ஊக்குவிக்கப்பட இயலும். பே ஸ்ட்ரீட்-யின் உயர்த்தப்பட்ட நீட்டிப்புகள் மற்றும் ரிச்மண்ட் மேல்தளம் தீவு-னுடைய துறைமுகத்தின் சிறந்த சில காட்சிகளையும், லோயர் மன்ஹாட்டனின் தொடுவானத்தையும் மற்றும் வெர்ரஸானோ பாலத்தையும் காண இயலும். இதேபோல் மக்கள் நடக்க அல்லது பாதுகாப்பாக பைக்கில் செல்ல, நிழலில் ஓய்வெடுக்க மற்றும் காட்சிகளை கண்டு மகிழ அனுமதிக்கும் வகையில் மேம்படுத்தப்பட இயலும்.

வடக்கு கடற்கரை நீர்முகப்புப்பகுதி நியூயார்க் நகரத்தின் ரத்தினங்களில் ஒன்று, பல இடங்களில் நீங்கள் கீழே தண்ணரீக்குள் இறங்க இயலும். ஃப்ரென்ட் தெருவின் அடிப்பகுதியில், மக்கள் வழக்கமாக கான்கிரீட் பாறைகளின் மீது தண்ணரீல் நடந்து செல்லுதல், அலைஸ் ஆஸ்டன் பூங்காவில் மீன் பிடித்தல் மற்றும் பிற அமைதியான இடங்கள் அல்லது மில்லர் லான்ச்-க்கு அருகே படகுகள் பார்த்தல் போன்ற செயலற்ற இன்பம் மற்றும் ஓய்விற்கு இது ஒரு பரிசளிக்கப்பட்ட இடம். இது பழைய நியூயார்க்கின் நினைவை கொண்டிருக்கின்றது—நீர்முகப்பு பகுதி பரபர்பபாகவும் அதே நேரத்தில் எளிமையாகவும் மிகைகட்டுமானம் மற்றும் மிகைவடிவமைப்பு இல்லாமல் இருக்கும் பொழுது, —நீங்கள் தண்ணரீன் சக்திவாய்ந்த இருப்பை உணரமுடியும். நீர் முகப்புடன் இணைந்து தோன்றும் புதிய வளர்ச்சிகள் மற்றும் புதிய மற்றும் புதிப்பிக்கப்பட்ட திறந்த வெளிகள் என இரண்டிலும் தரங்களை தக்கவைத்துக் கொள்வதற்காக நிலப்பரப்பினை மேம்படுத்தும் ஆற்றலுடன் விளங்கும் வர்த்தகங்கள், நிறுவனங்கள், மற்றும் முகமைகள் ஊக்குவிப்போம் என நம்புகின்றோம். .

ஸ்டேட்டன் தீவு, நீங்கள் நகரத்தை விட்டு தள்ளியிருக்க இயலும் என உங்களை நினைக்க வைக்கும் ஒர் இடம், ஆனால் இருந்தும் அது ஒரு முக்கிய நகர சமூகமாக இருக்கின்றது. பாதுகாத்தல் மற்றும் அதனை தனித்துவமான மற்றும் தனிச்சிறப்புமிக்கதாக உருவாக்கும் தரங்களை மேம்படுத்தும் பொழுது, எங்களது பணியானது, வடக்கு கடற்கரைப்பகுதி எதிர்காலத்தை நோக்கி நகர்வதற்கு வழிகாட்டுதல்கள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கி உதவுதல் போன்றவையாக உள்ளது,

---

அதிகாரி ஆரோன் செயின்ட் ஜார்ஜில் உள்ள அவர்களுடைய வீட்டில் தனது 3 வயது மகள் சமீராவுக்காக சிறிது சூப்பை குளிர வைக்கின்றார். ஸ்டேட்டன் தீவு சொந்தமாக சொத்தினை பெறுவதற்கான வாய்ப்பினை வழங்கியதால், 8 வருடத்திற்கு முன்பு, முதன்முறையாக வீட்டு உரிமையாளர்கள், கசெரஸ் குடும்பம் ப்ரூக்லினிலிருந்து ஸ்டேட்டன் தீவிக்கு இடம்பெயர்ந்தனர். கடந்த இரண்டு வருடங்களில் அவர்களுடைய வடக்கு கடற்கரைப்பகுதியின் மதிப்பு மிகப்பெருமளவில் அதிகரித்ததால் முழு பணம் கொடுத்து வாங்குபவர்களிடமிருந்து எண்ணற்ற வாய்ப்புகளை அவர்கள் நிராகரித்திருக்கிறார்கள்.

21 வயது டோமினிக் ஆன்டர்சன், அவருடைய அப்பா, வால்டர், லேப்ரடார் மற்றும் பேடி ஆகியோருடன் இருக்கின்றார். அங்கேயே பிறந்து வளர்ந்த ஸ்டேட்டன் தீவுவாசியான டோமினிக் வடக்கு கரைப்பகுதியின் வியத்தகு கலாச்சார மாற்றங்களை அவருடைய தனிப்பட்ட பயணங்களிண் மூலம் ஒரு திருநம்பி என்கிற அடையாளத்துடன் அனுபவப்பட்டு இருக்கின்றார்.

10 வயது சார்லஸ் ஜேகோப், மவுண்ட் சினை தேவாலயத்தில் இருக்கைகள் ஒதுக்கித்தரும் பணியில் இருக்கும் தன்னுடைய தாயார் ஷேரானுடன்,. தன்னார்வப்பணி செய்கின்றான். அதே சாலையில் கொஞ்சம் தள்ளி உள்ள அல்பேனியன் இஸ்லாமிய கலாச்சார மையத்தில் சபை உறுப்பினர்கள் வார பிரார்த்தனையில் கலந்துகொள்ளுகின்றனர்.

நிலைமாற்றம் ஏற்படும் ஒரு தருணத்தில் அவர்கள் தங்களை கண்டடைகின்றார்கள் என்பதில் ஸ்டேட்டன் தீவு வாசிகளுக்கு எந்த இரகசியமும் இல்லை. வடக்கு கரைப்பகுதியில் மாற்றங்களின் அலை ஒன்று உள்ளது. இந்த மாற்றம், குடும்பங்களையும் சமூகங்களையும் அவர்கள் வாழும் வழிமுறை, ஒன்று திரளும் விதம், ஸ்டேட்டன் தீவினைப் பற்றி சிந்திக்கும் விதம் போன்றவற்றில் பாதித்து இருக்கின்றது. இம்மாற்றங்கள் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு நிச்சயமாக மிகக் குறுகிய கால அவகாசம்தான், ஆனால் இந்த பிம்பங்கள் வடக்கு கடற்கரைப்பகுதியில் உள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் சில விவரனைகளை கண்டறியதொடங்கியுள்ளன.

[4 photos - see "Gareth Photos" folder in "Draft Content Submissions"]

---

முக்கிய மைல்கற்கள்
மார்ச் 28, 2017 → ஸ்டேட்டன் தீவு கலை வெளியீட்டு நிகழ்வில் ஆரம்ப பரிந்துரைகள் வெளியீடு
வசந்தகாலம் – கோடைகாலம் 2017 → மேற்கொண்டு, பரிந்துரைகளின் மீதான கருத்துக்கள் மற்றும் பின்னூட்டங்களையும் சேகரிக்கவும்
கோடைகாலம் 2017 → பரிந்துரைகளுக்கான ஆதரவு
→ மேலும் பரிந்துரைகளை உருவாக்க
இலையுதிர்காலம் 2017 → எஸ்ஐ கலை மற்றும் ஆலிஸ் ஆஸ்டின் மாளிகையில், இறுதி பரிந்துரைகள் வெளியீடு மற்றும் கண்காட்சிகள் நடத்துதல்
இலையுதிர்காலம் 2017 – 2018 → பரிந்துரைகளில் காணப்படும் கருத்துக்களை விமானிகள் சோதனை செய்தல்

ஃப்யூச்சர் கல்ச்சரில் ஈடுபட, 212-695-2432x7 என்ற எண்ணில் அல்லது futureculture@designtrust.org. என்னும் மின்னஞ்சலில் ப்ராஜெக்ட் குழுவை தொடர்பு கொள்ளவும்.

எதிர்காலக் கலாசாரம்

FUTURE CULTURE

## பதிப்பு 1

எதிர்கால கலாச்சாரத்தின்

---

வடக்கு கடற்கரைப்பகுதி விரைவில் வேறுவிதமாக தோற்றம் அளிக்கும் என்பதற்கு, ஸ்டேட்டன் தீவு நீர்முகப்பின் நெடுகிலும் உள்ள பரந்த அளவில் அதிக எண்ணிக்கையில் உள்ள கட்டுமான கிரேன்கள் கட்டியம் கூறுகின்றன. இந்த பன்முகத்தன்மைவாய்ந்த நகர்ப்புறமையப்பகுதி மற்றும் இயல்பாக நிகழும் கலாச்சார நகரத்துடைய முக்கிய மாற்றத்திற்கு மத்தியில், தற்போதுள்ள கலாச்சார சமுதாயத்திற்கு முன்னேற்றம் என்பதன் அர்த்தம் என்ன என்பதைப்பற்றி பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. புதிதாக ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் உள்ளூர் கலாச்சாரத்தின் ஆன்மா-வை எவ்வாறு எதிரொலிக்க இயலும்? வேலைசெய்துவரும் நீர்முகப்பு எந்த வகையில் பங்காற்றுகின்றது? எந்தவகையான சுற்றுச்சூழல் சக்திகள் கருத்தப்பட வேண்டும்? மற்றும் தூசிகள் தணிந்தவுடன் இங்கு கலைகள் அதற்கென ஒரு இடத்தைப்பெற்றிருப்பது தொடருமா?

ஸ்டேட்டன் தீவுவாசிகள் இந்த கேள்விகளையும் மற்றும் மற்ற அம்சங்களைப் பற்றியும் நேரடியான சமூக கூட்டங்களிலும் மற்றும் பயிற்சிபட்டறைகளிலும் *ஸ்டேட்டன் தீவுடைய நீர்முகப்பை இணைக்கும் எதிர்கால கலாச்சாரத்தின்* – (பொது *வெளி* வடிவமைப்பு அறக்கட்டளை-ஸ்டேட்டன் தீவு கலை*களுடன்* இணைந்து பணியாற்றிவரும் ஒரு திட்டம்) பகுதியாக சிந்தித்துக்கொண்டுள்ளனர்.

ஜூலை 2014-யில், வளர்ந்துவரும் நீர்முகப்பின் தன்மைகளை வடிவமைப்பதில் கலாச்சார சமூகத்தின் பங்கு இருந்தது என உறுதிசெய்வதை ஒரு வழிமுறையாக முன்மொழிந்து வடிவமைப்பு அறக்கட்டளை விடுவித்த வெளிப்படையான அழைப்பிற்கு ஸ்டேட்டன் தீவு கலைகள் விண்ணப்பித்தது. எவ்வாறு கலைகள் மற்றும் கலாச்சார செயல்பாடுகள் சமத்துவமான வளர்ச்சிக்கும் தரமான பொதுவெளிக்கும் ஒரு மதிப்பிற்குரியவகையில் பங்காற்ற இயலும் என்பதை இத்திட்டம் வெளிப்படுத்த உதவும் என்னும் நம்பிக்கையில், ஒரு சுயாதீனமான நீதிஅமைப்பு, இதை தேர்ந்தெடுத்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, திட்டத்திற்கான ஆதரவை திரட்டுவதற்கும் நோக்கங்களை மேம்படுத்துவதற்கும் நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றின.

அக்டோபர் 2016-யில், ஸ்டேட்டன் தீவு கலைகள் *எதிர்கால கலாச்சாரத்தின்*-னுடைய சந்திப்பை நிகழ்த்தியது. இந்நிகழ்வில் பல்வேறு மக்கள் திட்ட

உறுப்பினர்களை சந்திப்பதற்கும் கலாச்சார சொத்துக்களை வரைபடத்தின் மூலம் சுட்டுவதற்கும் மற்றும் பொது பகுதிக்கான சவால்களில் பங்கேற்பதற்கும் வந்திருந்தனர். பிறகு குறுகியகாலத்தில், பன்முகத்தன்மை மற்றும் சக்திவாய்ந்த அணியினை ஒன்றிணைத்து கலாச்சார நிலப்பரப்பினை பதிவு செய்வதற்கும், தேவைகள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணுவதற்கும் மற்றும் உத்திகளை மேம்படுத்த துவக்குதற்கும் ஆறு வார காலத்திற்கு பணிபுரியும் ஒரு தீவிரமான குழு கூட்டப்பட்டது. இதற்கிடையில், திட்டத்தின் குழுவினர் உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் சிறிய வணிகங்கள் போன்றவற்றை கணக்கெடுப்பு செய்தன மற்றும் பொது மற்றும் தனியார் பங்குதாரர்கள் பலரை சந்தித்தனர்.

வெவேறு அடையாளங்களை, பின்புலங்களை, ஈடுபாடுகளை, பிரிவுகளை மற்றும் கலாச்சார பழக்கங்களை பிரதிநிதித்துவம் செய்யும் மக்களிடமிருந்து பெறப்பட்ட இந்த மதிப்புமிக்க தகவலகளைக்கொண்டு, *எதிர்கால கலாச்சாரம்* அணி செயல்படுத்தத்தக்க வடிவங்களை, திட்டமிடுதலை மற்றும் கலைகள் மற்றும் கலாச்சார ஈடுபாடுகளுக்கான கொள்கை பரிந்துரைகளை பொது பகுதியில் இந்த அபாரமான நீர்முகப்பினை நியூ ப்ரைட்டன் -லிருந்து ஸ்டேப்பில்டன்–யிற்கு நீட்டிப்பிற்காக தற்போது மேம்படுத்தும்.

இந்த செய்தித்தாளை நாங்கள், நான்கு பதிப்புகளில் முதலாவதாக, வடக்கு கடற்கரைப்பகுதியின் *எதிர்கால கலாச்சார-த்தை* வரையறுத்தல், திட்டமிடல், நிகழ்த்துதல் மற்றும் வடிவமைத்தல் போன்றவற்றை எவ்வாறு நாம் ஒன்றாக இணைந்து வரையறுக்க இயலும் என்பதைப் பற்றிய ஒரு முக்கியமான உரையாடலை துவக்குவதற்காக உருவாக்கியிருக்கிறோம்.

நீங்களும் இதில் ஈடுபட விரும்பினால், designtrust.org/projects/future-culture/ என்னும் இணையதளத்தை பார்க்கவும் அல்லது futureculture@designtrust.org என்னும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

---

நன்றி (திட்டம் வழங்கியதற்காக)
*எதிர்கால கலாச்சாரம்* என்பது பொது வெளி வடிவமைப்பு அறக்கட்டளை அமைப்பு ஸ்டேட்டன் தீவு கலைகளுடன் இணைந்து செயல்படுத்திவரும் – ஒரு திட்டம் ஆகும்

பெருந்தன்மையான எதிர்கால கலாச்சாரம் உருவாவவதை தங்களுடைய பகுதி பகுதியான தாராள ஆதரவின் மூலம் சாத்தியப்படுத்தியவர்கள்:

திட்டத்திற்கான நிதியுதவி பின்வரும் வடிவமைப்பு அறக்கட்டளையின் வட்டாரத்திலிருந்தும் அளிக்கப்பட்டுள்ளது.: அக்னேஸ் குண்ட், கிட்டி ஹாக்ஸ்,

சோபியா டபிள்யூ. ஹலீ, தி லில்லி அய்சின்க்ளோஸ் அறக்கட்டளை நிறுவனம், கமிலா பாஸ்டர் மற்றும் ஸ்டீபன் மஹரம், க்ளேர் வெய்ஸ், மற்றும் ஆன்ட்ரியா வுட்னர்.

---

வரைபடம் மற்றும் செயற்பாட்டுக் குழு பற்றி

வடக்கு கடற்கரை பகுதியினை சிறப்பானதாக்கும் இடங்கள் மற்றும் இடைவெளிகளை கண்டறிவது *எதிர்கால கலாச்சார* செயற்பாட்டுக் குழுவின் ஆறு அமர்வுகளின் முதன்மையான செயற்பாடுகளில் ஒன்றாகும். பாதுகாக்கப்படவேண்டியதும் மற்றும் பராமறிக்கவேண்டியதுமான தற்போதுள்ள கலாச்சார சொத்துக்களை வரைபடத்தில் சுட்டுவதற்காக அணி ஒன்றிணைந்து பணிபுரிந்தது. செயற்பாட்டுக்குழுவின் உறுப்பினர்கள் நினைவுகள் மற்றும் நீர்முகப்பு பகுதியின் கலாச்சார வாழ்க்கையைப் பற்றிய தனிப்பட்ட வரலாறுகளையும் பகிர்ந்துகொண்டனர் மற்றும் கடந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தின் பாடங்களைக் கொண்டு எவ்வாறு எதிர்கால மேம்பாடுகளை தெரிவுபடுத்த இயலும் என்பதைப்பற்றிய உத்திகளை வகுத்தனர்.

---

வேலிக்கு பின்னால் இருந்து புது தகவல்கள்
செய்தவர்: பென் மார்கோலிஸ், கொள்கை ஈடுபாட்டாளர்

எதிர்கால கலாச்சார திட்டத்தின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று, அளவுகோல், இடம் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள மேம்பாட்டு திட்டங்களுக்கான காலம் போன்றவற்றைப் பற்றி கலாச்சார சமூகத்தின் உறுப்பினர்கள் புரிந்துகொள்வதற்கும் தொடர்புகொள்வதற்கும் உதவி செய்வதாகும்.

வடக்கு கடற்கரைக்காக திட்டமிடப்பட்ட 1.2 பில்லியன் டாலர்கள் முதலீடு – தி நியூ யார்க் வலீ, பி.எப்.சி பார்ட்னர்ஸ் எம்பயர் அவுட்லெட்ஸ், ட்ரைஆங்கிள் ஈக்குவிட்டீஸ் கலங்கரை விளக்கப் பகுதி, மற்றும் அயர்ன் ஸ்டேட் டெவலெப்மென்ட்-னுடைய அர்பி மற்றும் ஸ்டேப்பில்டன் நீர்முகப்பு திட்டங்கள் - நகரத்தினுடைய வரலாற்றில் மிகப்பெரிய வர்த்தக நீர்முகப்பு மேம்பாட்டினை உள்ளடிக்கியதாக இருக்கலாம். இந்த மேம்பாட்டுப்பணிகள் தோராயமாக 25 ஏக்கர் நீர்முகப்பு நிலங்களை பாதிக்கும் மற்றும் 2,200 குடியிருப்பு அலகுகள், 500,000 சதுர அடி சில்லறை / அலுவலக இடம் மற்றும் 400 ஹோட்டல் அறைகள் – தோராயமாக 5,000 புதிய

குடியிருப்பாளர்கள் மற்றும் எண்ணில் அடங்காத அளவில் அதிகப்படியான சுற்றுலா பயனிகளை அழைத்துவரும்.

செயின்ட் ஜார்ஜ்-யில் மட்டும், இரண்டு தசாப்தங்களில் வசிக்கும் மக்கள்தொகையின் பெருக்கம் 25% அளவிற்கு அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது, கூடுதலாக மில்லியன் கணக்கான வருடாந்திர பார்வையாளர்கள் மற்றும் பொருட்கள் வாங்குபவர்கள் – இவை அனைத்துடனும் கூடுதலாக இன்று பயணப்படகு எடுப்பவர்கள் 22 மில்லியன். மேலும் மேம்பாடுகள் திட்டமிடப்பட்டுவருகின்றது – நகரத்தின் பே ஸ்ட்ரீட் தாழ்வாரம் மாற்றியமைக்கப்படுவதன் மூலம் மற்றொரு 2,500 குடியிருப்புகள் உருவாகுவதற்கான சாத்தியங்களுக்கு வழிவகுக்கலாம்.

இந்த குறிப்பிடத்தகுந்த மாற்றம் முக்கியமான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் என இரண்டிற்குமே காரணமாக அமைகின்றது. (நாங்கள் எதிர்கால வெளியீடுகளில் புதுப்பிக்க இருக்கும் கட்டுமான காலவரிசைக்கு, கீழே பார்க்கவும்). நகரத்தின் கண்ணோட்டத்தில், ஸ்டேட்டன் தீவில் இன்னும் அதிக அளவில் வேலைவாய்ப்புகள், வேலைக்குச் செல்ல குறைந்த நேர பயணம் மற்றும் வளர்ச்சிக்காக கிடைக்கும் நிலங்களுக்கான வாய்ப்புகளுடன் இணைந்த இன்னும் ஒரு நெகிழ்திறன் கொண்ட நீர்முகப்பு போன்றவற்றிற்கான தேவைகள் உள்ளது. கலாச்சார உறுப்பினர்கள் வடக்கு கடற்கரைப்பகுதி ஒரு “வெற்று பலகை-யாக பார்க்கப்படக்கூடாது என்பதை ஆணித்தனமாக உணர்ந்துள்ளனர். மற்றும் அந்த மேம்பாட்டுப்பணிகள் தனித்துவமான மக்கள் கலவை, கலாச்சாரம் மற்றும் ஏற்கனவே உள்ள வசதிகளின் மீது கட்டவேண்டும். எங்கள் *எதிர்கால கலாச்சாரத்தின்* பரிந்துரைகள், இப்பபகுதியினுடைய சமுதாயங்களின் நீண்ட கால நன்மைக்காக இந்த முன்னோக்குகளுக்கு இடையேயான ஒற்றுமைகளை கண்டறியும் நோக்கம் கொண்டுள்ளது.

பொது மற்றும் தனியார் திட்டங்கள் பற்றிய மேலதிக தகவலுக்கு மீண்டும் இங்கு பார்க்கவும் “வேலிக்கு பின்னால்”.

எம்பயர் அவுட்லெட்ஸ்: பிரம்மாண்டமான திறப்பு விழா நவம்பர் 2017 யில் நடைபெற இறுதி செய்யப்பட்டுள்ளது.
நியூ யார்க் வலீ : திறப்பு தேதி-க்கான இலக்கு 2018 துவக்கம்
கலங்கரை விளக்கப்பகுதி: கட்டம் I 2018, கட்டம் II: இலையுதிர்காலம் 2019 (கணிக்கப்பட்டது)
ஸ்டேட்ப்பில்டன் நீர்முகப்பு பூங்கா

முழுப்பூங்காவின் இறுதியான வடிவமைப்பு: 2017
கட்டம் II கட்டுமானம்: 2018

கட்டம் III கட்டுமானம்: 2020

ஸ்டேட்ப்பில்டன் நீர்முகப்பு / அர்பி மேம்பாடு

கட்டம் I முடிவுறுவது: வசந்தகாலம் / கோடைகாலம் 2017

கட்டம் II முன்மொழிதல்களுக்கான உருவாக்குபவரின் வேண்டுகோள் (ஆர்.எப்.பி): 2017-18

கட்டம் III உருவாக்குபவர் ஆர்.எப்.பி –டி.பி.டி

---

ஸ்டேட்டன் தீவின் கடல்சார் நினைவுகள்

உருவாக்கியவர்: பாப் ரைட், ஸ்டேட்டன் தீவு கலைகள் கிரைமிய வாழ்க்கை ஈடுபாட்டாளர்

இது அசிங்கமான, தொழில்துறை, மற்றும் ஒரு கெட்ட நோக்கத்திற்காக பணிபுரிந்துள்ளது. கன உலோக, துருபிடித்த, லாபமில்லாத, மற்றும் இறுக்கமாக பிடித்துக்கொண்டுள்ளது. ஒரு துரிதமான சோதனை அது அவ்வாறே இருக்கக்கூடும் எனக் கூறியது. ஆனால், என்னுடைய மாமா ஜார்ஜ் ஒரு பழைய சம் கிரைன்டர்* (இறைச்சி அரைப்பான்)-ஐ மோட்டார் கிடங்கின் அடியிலிருந்து வெளியே இழுத்தபோது நான் அவருக்கு சுத்தம் செய்ய உதவிக்கொண்டிருந்தேன். அப்போது, எனக்கு இது தேவைப்படுமா என்று கொஞ்சம் நகைச்சுவையாக என்னைகேட்டார் நான் ஆம் என சொல்ல தயங்கவில்லை, நான் அதிர்ச்சியடைந்திருந்தேன். அவரிடம் ஒரு சிறு பகுதி, என்னுடைய மாமா பில்-லுடைய பழம்பெரும் (எப்படியாயினும் குடும்ப ஞானத்தில்) படகு *தி அமிகோஸ்*-யின் ஏதேனும் சிறு பகுதி இருந்தது என்பதை என்னால் நம்ப இயலவில்லை. ஒரு குழந்தையாக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மதியமும் என்னுடைய தாத்தா பாட்டி வீட்டில் பெரும்பாலும் என் தந்தை மற்றும் அவரது நான்கு சகோதரர்களின் நகைச்சுவை, கடந்த கால அனுபவங்களை கேட்டும் செலவழிக்கப்பட்டது. மற்றும் இரண்டாம் உலகப்போரால் அழிக்கப்படுவதற்கு முந்தைய *தி அமிகோஸ்*-யில் அவர்களின் பல்வேறு பயணங்களைப் பற்றியும் மற்றும் அவளை கடல்வழி பயனத்தில் அனுப்பிவைக்கும் சுதந்திரம் (மற்றும் எரிபொருள்) பற்றியும் எவ்விதமாற்றமும் இல்லாமல் சில கதைகளை கூறினார்கள்.

என்னிடம் வேறு சில பழைய குடும்ப கருவிகள் இருந்தன மற்றும் அவைகள் எளியமையான அதிகபயன்பாடுக்கு உட்படுத்தப்பட்ட பழைய கருவிகளைவிட பழமையானவை. நீங்கள் அவைகளை எடுக்கும் போது, அதன் கடின பயன்பாட்டினாலும் அதில் வேலைசெய்தவர்களின் கைகளிலிருந்த எண்ணெயினாலும் உங்களுடைய கைகள் தேய்ந்துபோன இடங்களுக்கு இயற்கையாகவே நழுவிசெல்கின்றது. இவைகள் என்னுடைய டி.என்.ஏ

வைக்கொண்டு பளபளப்பாக்கப்படுகின்றன மற்றும் எப்போதும் கிடைத்திராத என்னுடைய முன்னோர்களுடைய உடலை எவ்வளவு நெருக்கமாக இயலுமோ அவ்வளவு நெருக்கமாக தொடும் உணர்வை தருவதாக இது உள்ளது. அவர்கள் பயப்படுகிறார்கள்.

சம் கிரைன்டர் (இறைச்சி அரைப்பான்) ஒரு எண்ணெய் குளியலிடம் சரணடைந்து மற்றும் கைப்பிடியின் முதல் முனை என்னை *தி அமிகோஸ்* யின் பின்பகுதிக்கு அழைத்து சென்றது. பதுங்கு குழி அதன் இரைப்பைக்குள் நழுவவிடப்பட்டதாகவும் மற்றும் ஒரு மாபெரும் எண்ணெய் மென்படலம் எங்களுக்கு பின்னால் இருப்பதாகவும் அது எங்களை வடீவரை தொடர்வதைப்போலவும் நான் கண்டேன்.

ஒரு சம் கிரைன்டர் என்பது மீன் தூண்டிலுக்காக இரைச்சி மற்றும் மற்றபொருட்களை கலக்க பயன்படுத்தப்படுகின்றது

ஸ்டேட்டன் திவு கலைகளுடைய கிராமவாழ்க்கை நிகழ்ச்சி (எஸ்.ஐ.ஏ ஃபோல்க்லைப்) திட்டமிடல் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் பழமையான கலைகளை பராமரிக்கவும், வெளிஉலகிற்கு அறிமுகம் செய்யவும் பாதுகாப்பதற்கும் அர்பணிக்கப்படுகிறது. கிராமவாழ்க்கை பல்வேறு தலைமுறைகளின் வழியே கடந்துவந்து வாழும் மரபுகளில் சமூகங்களுக்குள் காணப்படுகின்றது. இந்த கலை வடிவங்கள் கலாச்சார பாரம்பரியத்தின் இழைகளாகும் மற்றும் கலாச்சாரப் பிரிவின் ஒரு முக்கியமான பரிமாணத்தின் அடித்தளங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.  2016-யில், நான்கு எஸ்.ஐ.ஏ ஃபோல்க்லைப் ஈடுபாட்டாளர்கள் ஸ்டேட்டன் திவின் உள்ளூர் பொருள் கலாச்சாரத்தினுடைய ஒரு உறுப்பின் மீது ஆய்வு செய்தனர். அவர்கள் கண்டறிந்தவைகளை விளக்கும் நான்கு அம்சகளில் இது முதலாவது ஆகும்.

---

டெட்ராய்ட்-ஐ கவனித்தல்
ஆய்வுசெய்தவர்: லிசா கஹெல், பங்கேற்பு கலை ஈடுபாட்டாளர்

அக்டோபரில் நான் டெட்ராய்ட்-டிற்கு ஒரு பயனம் செய்தேன். நியூ யார்க்கின் கலைகள் அறக்கட்டளையால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறு கலைகள்  அந்த மாநகரத்திற்கு புத்துயிர் அளிப்பதில் ஒரு பங்களிப்பு செய்து உதவிபுரிந்துள்ளது என்பதை இப்பயனம் ஆராய்ந்தது. இந்த தலைப்பு கலைப்பூர்வமாகவும் மற்றும் *எதிர்கால கலாச்சரத்திடம்* உள்ள உறவின் அடிப்படையிலும் என இருவிதத்தில் எனக்கு தொடர்புடையதாக இருந்தது. என்னுடைய சொந்த கலையில், நம் வசிப்பிடத்தின் சுற்றுச்சூழல்கள் எவ்வாறு நம் வாழ்க்கையை பாதிக்கின்றன என்பதில் எனக்கு ஆர்வம் அதிகம். சில

தருணங்களில் ஆச்சர்யமூட்டும் வகையிலும் அதே வேளையில் நமக்கு சிறப்பாக சேவையளிப்பதற்கு அதையொட்டி நாம் நம்முடைய சொந்த சூழலில் பாதிப்பு ஏற்படுத்த இயலும்.

எங்களுடைய உள்ளூர் வழிக்காட்டிகளாக இரு பெண்கள் இருந்தனர். இருவரும் டெட்ராய்ட்- யின் பூர்வகுடிகளாகவும் பிறப்பிடத்திற்கு திரும்பும் முன சில காலங்கள் நியூ யார்க் நகரத்தில் இருந்தவர்களும் ஆவர். டெட்ராய்ட்-இன் நகர்ப்புறமையப்பகுதி முழுவதும் கலாச்சாரம் – கல்வி நிறுவன்ங்கள், குழுக்கள் மற்றும் தனிநபர்கள் போன்றவற்றிற்காகவும் அவர்களுடைய படைப்பாக்க நிறுவனம், டெட்ராய்ட் விளையாட்டு மைதானம் தகவல் பரிமாற்றும் பிணைப்பாக செயல்படுகின்றது. அவர்கள் அருங்காட்சியகங்கள், காட்சியகங்கள், குடியிருப்புக்கள், மற்றும் ஸ்டூடியோக்கள் போனறவற்றை பார்வையிட ஏற்பாடு செய்துதந்தனர். மேலும் இவைகளுக்கு செல்லும் வழியில் கலாச்சாரம் செழிப்பான மற்றும் நிறுவன பகுதிகளையும் சுட்டிக்காட்டினர். அவர்கள் வழங்கும் சேவைகளின் வகை ஒரே நேரத்தில் பல்வெறு செயல்பாடுகளைக் கொண்டிருக்கும் ஒரு மாறுபட்ட சமூகத்தினரை இணைப்பதற்கு உதவுகிறது.

அடிப்படை கட்டுமாண பிரச்சனைகளினால், குறிப்பாக விரைவாக வளர்ந்துவரும் நகர்ப்புறமையப்பகுதியின் வெளிப்பகுதியில், அவதியுற்றாலும், டி.ஐ.ஒய்-யின் சமுதாயப் பண்பின் அடிப்படைக் கூறுகள் இன்னும் உயிர்ப்புடன் மோட்டார் சிட்டி முழுதும் சிறப்பாக உள்ளது என்பதை தெளிவாக உணர முடிந்தது. டெட்ராய்ட்-டின் கலைகள் சமூகம் சிறியது, ஆனால் ஆற்றல் வாய்ந்தது மற்றும் ஒருவருக்கொருவர் வலிமையான ஆதரவு அளித்துவரும் அமைப்பாக உள்ளது. பல்வேறு விதமான கலாச்சார பழக்கங்களுக்கு இடையே அதிக அளவிலான அயல் மகரந்தசேர்க்கை நடைபெறுகின்றது, மற்றும் ஆன்மாவின் பெருந்தன்மை வெற்றிக்கு தேவையான ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது. நாகரீகம் மற்றும் கண்டுபிடிப்பினால் நிறைந்த ஒரு துடிப்பான நகரம், நகர்ப்புற சுற்றுச்சூழல் வளங்கள் மேலாண்மை மற்றும் அதன் வளமான வரலாறு போன்றவற்றை நோக்கிய கவனத்துடன் செயல்படுவது என்னும் ஒரே உறுதியான குறிக்கோளை நோக்கி பெரிய மற்றும் சிறிய செயல்வரீர்கள் பணியாற்றுகின்றனர்.
.

எனக்கு பயனத்தின் ஒரு முக்கியமான சாரமாக, உலக புகழ் பெற்ற ஹைடெல்பர்க் திட்டத்தை வரும் ஆண்டுகளில் அது கலைக்கப்பட தொடங்குவதற்கு முன் காணும் வாய்ப்பு கிடைத்தை குறிப்பிடுவேன். நிறைந்த வண்ணங்கள் தீட்டப்பட்ட மற்றும் கற்பனைமிகுந்த அலங்கரிக்கப்பட்ட வடுகள் ஓவியர் டைரி கைட்டன் ஒற்றைப்படையான பார்வையாகவும் அவருடைய சமூகத்தில் முதலீட்டு இருப்பதற்கு பதலளிக்கும் விதமாக உள்ளது. ஒரே ஒரு ஓவியர் அவருடைய சமுதாயத்தில் மக்களை

ஒன்றினைக்க இயலுவதும் அச்சமுதாயத்தை பற்றிய பெருமித உணர்வை பறைசாற்றுவதுமாக, இத்திட்டம் அனைவரையும் ஈர்க்கக்கூடிய ஒரு தாக்கத்திற்கான உதாரணம் ஆகும். இவர், இச்சமூகத்தினை நேசிக்கும் தீவிரமான செயல்பட்டாளராக இருப்பினும், இதயம்நொறுங்கும் விதமாக, கடந்த சில வருடங்களில் அவருடைய 12 கட்டமைப்புகள் தீ வைப்பு சம்பவங்களில் எரிக்கப்பட்டுள்ளது. 30 வருடங்களுக்குப் பிறகு, கைட்டன் அவர் அழைக்கும் “ஹெய்டல்பெர்க் 3.0– ஒரு ஆவணக்காப்பக அரங்கதிற்கான பயணத்தை துவக்கியுள்ளார்.

என்னை மிகவும் கவர்ந்த இடங்களில் ஒன்றாக மாபெரும் கிடங்கின் இருப்பிடத்தினை, ஒரு ஆக்கப்பூர்வமான காப்பமாக போனிரைட் எனப்படும் லாபநோக்கமற்ற அமைப்பினரால் நடத்தப்பட்டுக்கொண்டிருப்பதை குறிப்பிடுவேன். சமூக உருவாக்கத்திற்காக பேரார்வத்துடன் ஒரு உள்ளூர் உணவக விடுதி உரிமையாளரால் முன்கூட்டிய கடன் மூலம் வாங்கப்பட்டு பானிரைடின் இன் நடவடிக்கைகள் ஒரு புதுமையான மற்றும் நிலையான வழியில் வளர்ச்சி பற்றி சிந்திப்பதற்கான ஒரு திட்டத்தை வழங்குகின்றன. சந்தைக்கு கீழ் ஆக்கபூர்வ வணிகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்படுகிறது, இவைகள் அனைத்தும் அவர்களுடைய நடவடிக்கைகளில் சமூகத்தினையும் சேர்த்துக்கொள்ளும் ஒரு முயற்சியினை எடுக்கின்றன. ஒரு வேளை பானிரைடில் மிகவும் பிரபலமான வணிகஅமைப்பாக எம்பவர்மென்ட் ப்ளான் இருக்கலாம். இது வெதுவெதுப்பான மற்றும் தண்ணீர தவிர்க்கும் ஜாக்கெட்டினை தயாரிக்கும் ஒரு லாபநோக்கமற்ற நிறுவனமாகும். இந்த ஜாக்கெட் தூங்கும் உறையாகவும் மாற்றவல்லது. இந்த ஜாக்கெட்டுகள் டெட்ராய்ட்-டில் உள்ள வீற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. எம்பவர்மென்ட் ப்ளான்–இன் அனைத்து தொழிலாளர்களும் வீற்றவர்கள் அல்லது சமீபத்தில் வீற்றவர்களாக இருந்தவர்கள், இந்த பணிவாய்ப்புகள் அவர்களுக்கு சுதந்திரமான நிதிநிலையை உருவாக்கும் பாதையை அமைத்துகொள்ள உதவிபுரிகின்றது.

பல்வேறு வழிகளில் டெட்ராய்ட் மற்றும் ஸ்டேட்டன் தீவின் பொருளாதார விவரங்கள் மற்றும் இயற்கையான நிலஅமைப்புகளில் வேறுபட்டாலும், கலாச்சார இலக்குகள் அடிக்கடி மிகவும் ஒரே மாதிரி இருப்பதாக தோன்றுகின்றன. இரண்டிலும், புதிய அடித்தள முயற்சிகளுடன், பெரிய பொருளாதார சக்திகளின் முகங்கள் மற்றும் முன்னேற்றங்களுக்கு வெளியே வளர்ச்சியடைவதற்கும் செழித்தோங்குவதற்கும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதற்கும் தற்போதுள்ள கலாச்சார நிறுவன்ங்களுக்கு இடையே தகவல்தொடர்புக்கான தேவை இருப்பதாக நான் பார்க்கிறேன். இரண்டு நகரங்களின் ஆக்கபூர்வமான சமூகங்கள் ஆதரவு அளிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ள உற்சாகத்தை இப்பகுதியில் தெரிவுபடுத்துவதற்கும் கடினமாக

உழைக்கின்றன. இந்தப் பயணம் ஸ்டேட்டன் தீவின் கலாச்சார சமூகத்திற்கான சாத்தியங்களைப் பற்றிய என்னுடைய சிந்தனைக்கு ஆற்றல் அளித்தது. எனினும், டெட்ரொய்ட்-னுடைய கலாச்சார தோற்றம் பற்றிய என்னுடைய பார்வை ஒரு சுருக்கமான மற்றும் தொலைவிலிருந்து பார்க்கப்பட்ட பார்வை என்பதையும், ஒட்டுமொத்தமாக அது இன்னும் போராடிக்கொண்டிருக்கும் நகரம் என்பதை நானும் நன்கு அறிந்து இருக்கிறேன்.

---

உருவாக்கியவர் கரேத் ஸ்மித், புகைப்பட நகர்ப்புறவாழ்க்கை ஈடுபாட்டாளர்

முதல் சில மாதங்களில் இங்கு புகைப்படம் எடுத்ததில், வடக்கு கடற்கரைப்பகுதியின் தெருக்களில் நான் அதிக கவனம் அளித்திருந்தேன். நான் எனக்குள்ளே: குறுக்குச்சாலைகள் எங்கே உள்ளன? இங்கு வசிப்பது எவ்வாறான உணர்வாக இருக்கும்? எங்கே சத்தமாக உள்ளது? எங்கே அமைதியாக உள்ளது? இது போன்ற கேள்விகளை கேட்டுக்கொண்டேன்

நான் என்னுடைய அலைச்சலுக்கு விக்டொரி போல்வார்டை முதுகெலும்பாக பயன்படுத்தினேன். ஸ்டேட்டன் தீவைச்சேர்ந்த மக்களிடம் உரையாடினேன் மற்றும் இந்த இட்த்தைப்பற்றிய தங்களுடைய கதைகளைப் பகிர்ந்துகொண்ட பலரை சந்தித்தேன். இது, இந்தநகர்ப்புற நிலப்பரப்பாக மாறுவதன் உணர்வினை படம்பிடிக்க என்னை ஈர்க்கின்றது.

மதியநேர பயணங்கள், முடிதிருத்தும் கடை பார்வையிடுதல், காருக்கு நடந்து செல்லுதல் மற்றும் ஒரு பேருந்தை பிடிக்க ஓடுதல். இவைகள்தான் நடைபாதைகள், இவைகள்தான் சாலைகள், இவைகள்தான் வருவதற்கும் போவதற்குமான இடைப்பட்ட இடங்கள்.

---

முக்கிய மைல்கற்கள்

டிசம்பர் 2016: எதிர்கால கலாச்சாரத்தின் செயற்பாட்டுக் குழுவின் அமர்வுகளை முடித்து மற்றும் செய்தித்தாளின் பதிப்பு 1-யினை வெளியிடுதல்
குளிர்காலம் 2017: பரிந்துரைகளை வெளியிடுதல்
வசந்தகாலம் 2017: பரிந்துரைகள் மீதான பின்னூட்டங்கள் மற்றும் விமர்சன்ங்களை சேகரித்தல்
கோடை 2017: பரிந்துரைகளின் நியாயங்களை தெளிவுபடுத்துதல்
இலையுதிர்காலம்2017: கல்ச்சர் லாங்க் மற்றும் அலைஸ் ஆஸ்டன் ஹவுஸ் – யில் நிகழும் கண்காட்சியில் இறுதியான பரிந்துரைகளை வெளியிடுதல்
2018: பரிந்துரைகளில் காணப்படும் ஆலோசனைகளை விமானிகள்

சோதனைசெய்தல்*

* நிலுவையில் உள்ள நிதி

திட்டத்தைப்பற்றி மேலும் கற்றுக்கொள் அல்லது ஈடுபடு!
designtrust.org/projects/future-culture/ என்னும் இணையதளதை பார்க்கவும் அல்லது futureculture@designtrust.org என்னும் மின்னஞ்சல் அல்லது 212-695-2432 x7. தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளவும்.

---

வரவிருக்கும் கலாச்சார நிகழ்வுகள்

2016 செயின்ட் ஜார்ஜ் விடுமுறை சந்தை
புதன்கிழமை 12/14 – வெள்ளிகிழமை 12/16
காலை 11:00 முதல் இரவு 8:00 மணி
ஸ்டேட்டன் தீவு கலைகள் கல்ச்சர் லாங்க், 10 ஃபெர்ரி டெர்மினல் டிரைவ்

ஸ்டேட்டன் தீவு கலைகள் கல்ச்சர் லாங்க் அரங்கில் இடம்பெற இருக்கும் உள்ளூர் கடைகள் இந்த மூன்று நாள் விடுமுறை சார்ந்த சந்தையில் புதன் டிசம்பர் 14-யிலிருந்து வெள்ளி, டிசம்பர் 16 வரை காலை11 மணியிலிருந்து இரவு 8 மணி வரை இருக்கும். கையால் செய்யப்பட்ட ஆடை, அணிகலன்கள், நகை, வீட்டு பொருட்கள், உணவுப்பொருட்கள், செல்லப்பிரானிகள் பராமரிப்பு, தோல் பராமரிப்பு, பொம்மைகள், கலை பொருட்கள், புத்தகங்கள் போன்றவைகளை சந்தையில் விற்பனையாளர்கள் இடம்பெறுச் செய்வார்கள்

சன்டாக் தியேட்டர்ஸ் பெறமுயலும் "ஸ்டேட்டன் தீவு படகுப்பயணத்திலிருந்து காட்சிகள்" 2017 சமர்ப்பித்தல்கள்
புதன் நவம்பர் 30 – சனி டிசம்பர் 31

ஸ்டேட்டன் தீவு படகுப்பயணத்தின் ஒரு-கதாப்பாத்திர நாடகத்திற்கான சம்ர்ப்பித்தல்களிலிருந்து 2017க்கான காட்சிகளை சன்டாக் தியேட்டர்ஸ் பெறமுயல்கின்றது. இந்த தனித்துவமான நாடக தொடர்கள் பொதுவான கருப்பொருளை கொண்டிருக்கும். சன்டாக்-இன் 15-வது ஆண்டு நிறைவுவிழா கொண்டாட்டத்தின் பகுதியாக, நாடகாசிரியர்கள் எண் "15"-ஐ குறுகிய ஒரு கதாபாத்திர நாடகத்தின் அசல் எழுத்தில் உட்புகுத்த வேண்டும், , மேலதிக தகவலுக்கு www.sundogtheatre.org. என்னும் இணையதளத்தை பார்க்கவும்.

உரையாடலில் : அலைஸ் ஆஸ்டன் மற்றும் க்ரிஸ்டின் ஒசின்ஸ்கியின் புகைப்படங்கள்
தற்போது பார்வைக்கு டிசம்பர் 23ஆம் தேதி
2 ஹைறலன் கட்டிடம்

அலைஸ் ஆஸ்டன் மற்றும் க்ரிஸ்டின் ஒசின்ஸ்கி-யினுடைய படைப்புகள், ஏறக்குறைய ஒரு நூறாண்டு இடைவெளிகளை தவிர்த்து, ஸ்டேட்டன் 25தீவில் வாழ்க்கையின் ஒரு ஒளிவுமறைவற்றதொரு தோற்றத்தை கொண்டுள்ளது. காலத்தாலும் தூரத்தாலும் பிர்த்துவைக்கப்பட்டிருப்பினும் இரு கலைஞர்களின் படைப்புகள் ஒரே விஷயத்தை தாங்கியும் மற்றும் அணுகுமுறைகளிலும் ஒற்றுமைகள் உள்ளன. இந்த கண்காட்சி இரு கலைஞர்களும் அவர்களின் படைப்பின் வழியாக தொடர்புகொள்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகின்றது. அருங்காட்சியகத்தின் நேரங்களில் கண்காட்சி பார்வைக்கு இருக்கும்: செவ்வாய் – ஞாயிறு, காலை 11.00 – மாலை 5.00 மணி

அருங்காட்சியகத்தில் குளிர்கால இடைவெளி
திங்கள், டிசம்பர் 26 – வெள்ளி டிசம்பர் 30, மதியம் 1:00 – மாலை 3.00 மணி
கட்டிடம் ஏ, ஸ்டேட்டன் தீவு அருங்காட்சியகத்தின் ஸ்னக் ஹாார்பர், 1000 ரிச்மண்ட் டெரஸ்,

முன்பதிவு செய்ய தேவையற்ற, பள்ளிகளின் விடுமுறை கால நிகழ்வுகளாக நடந்துவரும் கதை சொல்லுதல், குடும்ப சுற்றுலா மற்றும் கலை செயல்பாடுகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழுங்கள்.

*ராபின் ரீப் கலங்கரை விளக்கம்: துறைமுகத்தில் ஒரு வடீ*
தற்போது பார்வைக்கு 2016
உயர்ந்த கடல்சார் சேகரிப்பு
ஸ்நக் ஹார்பர் கலாச்சார மையம் மற்றும் தாவரிவியல் பூங்கா, 1000 ரிச்மன்ட் டெரஸ், கட்டிட்டம் டி,

அமெரிக்க பொது சேவைகள் துறையால், 2010 ல் கலங்கரை விளக்கத்தின் உறுதிப்பத்திரங்கள் அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டது. 1939-இல் முடிக்கப்பட்ட இது, ஸ்டேட்டன் தீவினுடைய வடக்கு கடற்கரைப்பகுதியின் கில் வான் குல்-யின் வாயில் பகுதியில் அமைந்துள்ளது. கலங்கரை விளக்கத்தின் வரலாறு, குறிப்பாக அதனுடைய மிகப்பிரபலமான

பராமறிப்பாளர் கேட் வாக்கர் (1848–1931)–இன் கால கட்டம், தன்னார்வலர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தற்போதைய மீட்பு நடவடிக்கைகள் மற்றும் ஒரு டஜன் சமகால கலைஞர்கள் மூலம் விளக்கங்கள் போன்றவற்றை இக்கண்காட்சி உள்ளடிக்கியுள்ளது.

நீர் மற்றும் ஒளி
தற்போது பார்வைக்கு டிசம்பர் 30
கட்டிட எண் 11, 200 தி ப்ரொமனடே, கலங்கரை விளக்கம்

தேசிய கலங்கரை விளக்க அருங்காட்சியகம் ஒரு அசலான கலை காட்சியினை. நீர் மற்றும் ஒளி–யினை கருப்பொருளாக கொண்டு ஆராயும் விதமாக செஃபிர் கலைக்குழுவின் மூலம் வழங்குகின்றது. காட்சிப்பொருட்கள் அருங்காட்சியகத்தின் நேரங்களில் பார்வைக்கு இருக்கும். செவ்வாய் – ஞாயிறு. காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை திறந்த மைக் எஸ்.ஜ.சி.சி–யின் அரங்கத்தில்: மொட்டைமாடியில் கலை
ஞாயிறு ஜனவரி 8, மாலை 3.00 – 6.00
மொட்டைமாடியில் கலை, 776 ரிச்மன்ட் டெரஸ்

ஸ்டேட்டன் தீவு ஆக்கப்பூர்வ சமூகம் வழங்கும் இரண்டாவது ஞாயிறு இலக்கியத்தொடர்புடைய திறந்த மைக் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையன்றும் நம்முடைய புதிய அரங்கம் 776 ரிச்மன்ட் டெரஸ்–இல். இலவசம்! அனைத்து வயதினரும் வரவேற்கப்படுகின்றார்கள்..

தீவுக்குள்: ஸ்டேட்டன் தீவு புகைப்படங்கள் –எட்வர்ட் கொப்பெல்லா
தற்போது பார்வைக்கு ஜனவரி 15
வாக்னர் கல்லூரி அரங்கம், யூனியன் கட்டிடம், 631 ஹாவெர்ட் அவென்யூ

எட்வர்ட் கொப்பெல்லா–வின் "தீவுக்குள்: ஸ்டேட்டன் தீவு புகைப்படங்கள்" ஒரு ஒற்றை கண்காட்சியை தி வேக்னர் கல்லூரி அரங்கம் வழங்குகின்றது. கொப்பெல்லா, இயற்கை ஸ்டேட்டன் தீவின் உள்நாட்டு வட்டார கட்டமைப்பு அம்சங்கள், நகைச்சுவை கண்டறிதல், அழகு, மற்றும் வடுகள் மற்றும் முற்றங்களுடைய ஒவ்வொரு நாளிற்கான நிலப்பரப்பின் கருணைரசங்களை ஆவணப்படுத்துகிறார். அரங்க நேரங்கள்: செவ்வாய் – சனி, காலை 11.00 – மாலை 4.00 வியாழன், காலை 11.00 - இரவு 7.00 மணி வரை முன் பதிவின் அடிப்படையில்.

நியூயார்க் நகரத்தில் பிரஜைகள் குழு – சுற்றுப்புற மானியம்: சமூக திட்டங்களுக்கு $3,000 வரை
இறுதிநாள்: ஜனவரி 23

பிரஜைகள் குழு எங்களுடைய சுற்றுப்புற மானியத்தின் மூலமாக, குடியிருப்பாளர்கள் முன்னெடுத்து செல்லும் குழுக்களுக்கு நகரம் முழுவதிலும் உள்ள சமூகத்திற்கும் மற்றும் பள்ளிக்கூட திட்டங்களுக்காகவும் பணிபுரிய 3,000 டாலர்கள் வரை மைக்ரோ மானியம் வழங்குகின்றது. நாங்கள் குறைந்த வருமானம் உள்ள சுற்றுப்புறங்களை சார்ந்த குழுக்களுக்கும் மற்றும் தலைப்பு I அரசு பள்ளிகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்றோம்.

ஸ்டேட்டன் தீவுகள் அமர்வு: காதல் கடிதங்கள் மற்றும் கதைப்பாடல்கள்
ஞாயிறு பிப்ரவரி 5
பிற்பகல் 12:00–3:00
லிபர்டி டவெர்ன், 382 ஃபாரெஸ்ட் அவென்யூ

உங்களுடைய ஃபிடில்களை உயர்த்தவும் கிளர்ச்சியூட்டும் தாளங்களை உடைய பாரம்பரிய ஐரிஷ் இசைக்கு உங்களுடைய பாதங்களை தட்டவும் ஸ்டேட்டன் தீவு கலைகள் உங்களை அழைக்கின்றது. நிறுவனர்கள் மற்றும் உள்ளூர் அபிமானிகளான லின்டா ஹிக்மேன், டோக்ளஸ் பார், மற்றும் பாப் ரைட்டால், தலைமை வகிக்கபடும் அமர்வு, இசைக்கலைஞர்கள் மற்றும் இசைப்பிரியர்களுக்கு ஒரு மதிய இசைப்பொழுதையும் மேடையின் மேல் மற்றும் கீழ் பகுதியில் தோழமை பகிர்வையும் வழங்குகின்றது. ஒவ்வொரு மாத்ததின் முதல் ஞாயிறு அன்று அமர்வுகள் நடைபெறுகின்றது. இவற்றில், இசை வடிவங்களுக்கும் மற்றும் அயர்லாந்து மேற்கு கடற்கரையின் மரபுகள், அதிலும் குறிப்பாக கிழக்கு கால்வே மற்றும் கிளேர் போன்றவற்றின் மீது சிறப்பு கவனம் அளிக்கப்படுகின்றது.